Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம் 02 பெப்ரவரி (25 2 1991) திங்கட்கிழமை ஓசை 07

## 'பாதுகாப்பிற்காக' அகதி முகாமை இடம்மாற்றத் திட்டமாம்

(கொழும்பு)

மடு அகதிமுகாம் பாதுகாப்புக்கருதி பாதுகாப்பான இடத்திற்கு இடம்மாற்றப்படவுள்ளது என சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். வவுனியாவிற்கும் மதவாச்சிக்கும் இடையில் இந்த முகாம் மாற்றப் படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

### இரண்டாம் உலக மகாயுத்தத்தின்பின்

# வளைகுடாவில் பாரிய தரைப்போர் ஆரம்பம்

## யுத்தமுனைச் செய்திகளுக்கு அமெரிக்கா இருட்டடிப்பு

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் நடைபெறும் பாரிய அளவிலான தரைப்போர் நேற்றுக்காலை 6.30 மணிக்கு (இலங்கை நேரப்படி) வளைகுடாவில் ஆரம்பமானது. மூன்று இலட்சம் அமெரிக்க கூட்டணிப்படையினர் யுத்தப்போரைத் தொடக்கி வைத்தனர்.

அதேவேளை இப்போர் தொடர்பான செய்திகளை அமெரிக்கா இருட்டடிப்புச் செய்து வருவதாக வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

வளைகுடாப் பகுதியில் கடுமையான தரைப்போர் ஆரம்பித்துள்ளது ஈராக்கின் பிடியில் இருக்கும் குவைத்தை மீட்கும் கடைசிக் கட்டம் தொடங்கியுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அறிவித்திருக்கிறார்.

மேலும் அவர் குவைத்தை விட்டு ஈராக்கை வெளியேற்ற தன்னுடைய எல்லாப் படைகளையும் ஆற்றலையும் பயன்படுத்துமாறு ஜோர்ஜ் தமது இராணுவத் தளபதிக்கு உத்தரவிட்டுள்ளார்.

தரைப்போர் தொடங்கியதும் அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டிக் செனி வெளியிட்ட அறிக்கையில் "ஈராக்கிற்கு எதிராக விமானப்படைத் தாக்குதலும், கடற்படைத் தாக்குதலும் தொடர்ந்து நடப்பதாகவும் அதேநேரம் தரைப்படைத் தாக்குதலும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும்" தெரிவித்தார்.

பிரித்தானியப் படைகள் தரைப்போரில் ஈடுபட்டுள்ளனர் என்று பிரித்தானிய பிரதமர் ஜோன் மேயர் அறிவித்துள்ளார். (4ஆம் பக். பார்.)

### தரைப்போர்ச் செய்திகளுக்கு அமெரிக்கா இருட்டடிப்பு

ஈராக்கிற்கு எதிராக தொடக்கப்பட்டிருக்கும் தரைப்போர் தொடர்பான செய்திகளை அமெரிக்கா இருட்டடிப்புச் செய்துவருகின்றது. போர் முனையில் என்ன நடக்கிறது என்பது பற்றிய செய்திகள் மிகக் குறைவாகவே கிடைக்கின்றன.

சற்றுநேரத்திற்கு முன்பாக கூட்டுப்படைகள் ஈராக்கிற்கு எதிராகப் பாரிய தாக்குதலை ஆரம்பித்திருப்பதாக ஜோர்ஜ் புஷ் கூறியதை நினைவுபடுத்திச் செய்தியாளர் மாநாட்டில் பேசிய அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் டிக் செனி, கூட்டுப் (4ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ நடவடிக்கைகள் பெரிய தாக்கத் தேவையில்லை

-கொர்பசேவ்

(மொஸ்கோ)

"ஈராக்கிற்கு எதிராக இவ்...

### பேச்சுவார்த்தையை எதிர்த்தவர்கள்

## புலிகளின் அறிக்கையை இன்று மேடையில் வாசிக்கின்றனர்

-பிரேமதாஸா

(கண்டி)

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டதை முன்னர் எதிர்த்து வந்த எதிர்க்கட்சியினர் தற்போது விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் அறிக்கை ஒன்றை பகிரங்க மேடையில் வாசிக்கின்றனர் என்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா கூறியிட்டார்.

தம்புல்ல கலவெலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும்போது மேற்கண்டவாறு ஜனாதிபதி கூறினார்.

### தி. மு. க. அரசாங்கம்

## கலைப்பிற்கான காரணம் பாராளுமன்றில் வைக்கப்படும்

சுப்பிரமணியம் சுவாமி

(சென்னை)

தமிழ்நாடு அரசு கலைக்கப்பட்டதற்கான காரணங்கள் யாவும் ஆதாரபூர்வமாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று சென்னை வந்துள்ள மத்திய அமைச்சர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தமிழ்நாடு அரசிற்கும் (4ஆம் பக்கம் பார்க்க)

## வயதெல்லையோ கால எல்லையோ போராட்டத்திற்குக் கிடையாது

- யாழ். மாவட்ட தளபதி தினேஷ்

(மாதகல்)

"விடுதலை உணர்விற்கு வயதெல்லையோ கால எல்லையோ நிர்ணயிக்கப்பட முடியாத ஒன்று இந்திய விடுதலைக்காக மகாத்மாகாந்தி தள்ளாத வயதிலும் தொடர்ந்து போராடினார். வியட்நாம் போரில் மூதாட்டிகள் உட்பட 10 இலட்சம் பேர் தமது உயிரைத் தியாகம் செய்தார்கள்" என மாதகல் பகுதியில் நேற்றுக்காலை திறந்து வைக்கப்பட்ட இணக்க மன்றக் கட்டடத்திறப்பு விழாவில் உரையாற்றும் போது யாழ் மாவட்ட தளபதி தினேஷ் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் வியட்நாமில் இறந்தவர்களை உடலைப் புரட்டிப்பார்த்தபோது அங்கே 60 வயது மூதாட்டி, 25 வயது யுவதி, 10 வயது பாலகன் ஆகியோரே கூடுதலாகக் காணப்பட்டனர். இவர்களது தியாகத்தினாலேயே வியட்நாமிய மக்கள் இன்று சுதந்திரமாக வாழ்கிறார்கள்.

இதேபோல தமிழீழ விடுதலையிலும் நீங்கள் அனைவரும் உங்களால் இயன்ற வரையில் சகல விதத்திலும் உங்கள் பங்களிப்பைச் செலுத்த...

## கிளிநொச்சியில் குண்டு வீச்சு; கூட்டுறவுச் சங்க ஊழியர் பலி!

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி நகரில நேற்றும் விமானக் குண்டுவீச்சு இடம்...

தொழிலாளியாக பணிபுரியும் சுனேகலிங்கம் (வ 40) என்ற ஜெயந்தி நகரைச் சேர்ந்தவர்...

ஆர். பசுபதிப்பிள்ளை (வட்டக்கச்சி) ஆகிய தொழிலாளர்கள் படுகாயமுற்ற நிலையில்...

## வரி விளம்பரம்

### விற்பனையாகிறது

அல்காக்களும்பங்கசுக்களும். ஓர் அறிமுகம், தாவரவியல் மாணவர்களின் துணைநூல். ஆக்கம்: கலாநிதி சிவபாலன் Ph.D., B.Sc விலை ரூபா 50/- சொற்ப பிரதிகள் மட்டும் உள்ளன. விற்பனையாளர்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். (B-2027)

### தோத்திரத் திரட்டு

சைவத் திருநெறித் தோத்திரத் திரட்டு. (அகத்தியர் தேவாரத்திரட்டு, உமாபதிசிவாச்சாரியார் அருள் முறைத் திரட்டு உட்படப் பன்னிரு திருமுறைகளும் திருப்புகழ்ப் பாடல்களும் அடங்கியது) தொகுப்பு: க. சி குலரத்தினம். விலை ரூபா 25/- வெளியீடு விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

(B2028)


## இது எங்கள் போராட்டம்

"இது எங்கள் போராட்டம்" என்ற தெருக்கூத்து யாழ்நகரின் பல பாகங்களிலும் நடைபெற்று வருகிறது. இத்தெருக்கூத்தை நாயன்மார்கட்டு சனசமூக நிலைய கலை கலாசாரப் பிரிவினர் தயாரித்துள்ளனர். (24)

'புத்தரின் போதனையை'

# கடைப்பிடிக்கும் அரசாங்கம்

# வருவாய்க்கு மதுவிற்கலாமா?

(கொழும்பு)

"புத்தசாசனத்தைப் பேணுவதும், புத்தபிரானின் போதனைகளை வாழ்வதும் அரசியலமைப்பு ரீதியான கடமையாகக் கொண்ட சிறிலங்கா அரசாங்கம் மேலதிக வருவாயைப் பெறுவதற்காக மதுவகைகளைப் பயன்படுத்துவது முறையான செயலா" என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் கேட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழான இறக்குமதித் தீர்வைகள் தீர்மானம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அஷ்ரப் "புத்தசாசனத்தைப் பாதுகாக்க வேண்டிய கடமை பொருளாதாரக் காரணிகளினால் பாதிக்கப்படக் கூடியதா" எனக் கேட்டார்.

முன்னதாக பிரதமர் டி.பி விஜயதுங்க மதுபானங்கள் மீதான சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழான இறக்குமதித் தீர்வைகள் சம்பந்தமான தீர்மானத்தை முன்வைத்துப் பேசினார். இதற்குப் பதில் அளிக்கு முகமாகவே அஷ்ரப் மேற்கண்டவாறு பதில் அளித்தார்.

புத்தசாசனத்தைப் பேணுவதை அரச கடமையாக அறிவுறுத்தும் அரசியலமைப்பின் கீழ் சத்தியப்பிரமாணம் செய்த ஜனாதிபதியும், அரசாங்கமும் மேலதிக பணத்தைப் பெறுதற்காக மதபானங்களை பயன்படுத்துவது அடிப்படையில் சட்ட விரோதமானதே எனவே இத்தகைய நடவடிக்கைகளுக்கு எம்மால் ஆதரவு அளிக்க முடியாது என்றும் அஷ்ரப் கூறினார்.

## இருளைத்தேடி...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிந்திக்கக் கூடியவன் தான் பத்திரிகையாளனாவதற்குத் தகுதியவன்- அதைவிட்டு கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று நிற்பவன் பத்திரிகையாளனாக மாற முடியாது.

அந்த அனாதைச் சிறுவர் இல்லத்தில் பராமரிக்கப்படும், சிறுவர்கள் மீது இழைக்கப்படும் அநீதியைப் பற்றி விரிவாக எழுதினேன். எழுதியதையே கொண்டு பத்திரிகைக் காரியாலயம் நோக்கி போனேன். அந்த நாள் வளைகுடாப் போர் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. பத்திரிகைகளில் அதைப் பற்றித்தான் பரபரப்பான செய்தி- எங்கோ எந்தவொரு மைல்களுக்கு அப்பால், தமது வல்லரசுத்தனத்தைக் காட்ட முரட்டுத்தனமாய் மோதிக்கொண்டு, அதனால் ஏற்பட்ட இழப்புகளை கணக்குப் பண்ணி, உலகெங்கும் அறிவிக்கும். தாம் செய்வது சரி என்று நிரூபிக்க நிமிடத்திற்கு ஒரு அறிக்கை விட அந்த அறிக்கைகளை பக்கம், பக்கமாகப் போட்டு பத்திரிகைப் பக்கங்களை நிரப்ப, இங்கே சொந்த மண்ணில் உயிருள்ளவைத்து, அந்த அனாதைச் சிறுவர்களுக்கு இழைக்கப்படும் அநீதி, வெளியே தெரியாமல் மூடி மறைக்கப்பட்டுக் கிடக்கிறது.

நான் கொண்டு சென்ற பத்திரிகைச் செய்தியை, பத்திரிகை ஆசிரியர் படித்துப் பார்க்கிறார்; விசுக்கிறார். நம் மண்ணில் இப்படியும் நடக்கிறதா? என்று கேள்வி எழுப்புகிறார்.

அடுத்த நாள் பத்திரிகையில் முதற் பக்கத்தில் கொட்டை எழுத்தில் அந்தச் செய்தி வருகிறது. வளைகுடாப் போரில் ஈராக் சுட்டு வீழ்த்திய விமானம் பற்றிய செய்தியும், வல்லரசுத் தலைவர்கள் விட்ட அறிக்கைகளும் அதற்கு அடுத்தே பிரசுரமாகிறது. சிறுவர் இல்லத்தில் ஊழல் பற்றிய செய்தி முன் பக்கத்தில் வந்தது மட்டுமல்லாமல், அதைப்பற்றி ஆசிரியர் தலையங்கமும் பிரசுரமாகிறது.

அதற்கடுத்த நாள் சிறுவர் இல்லத்தில் ஊழல் செய்த ஊழியர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றியும், அச்சிறுவர்களை உடன் கவனிக்க, செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் பற்றியும் செய்தி வெளியாகிறது. அன்று வளைகுடாப் போர் பற்றிய செய்தி கடைசிப் பக்கத்தில் ஒரு மூலையில்...

அதன்பின் அந்த அனாதைச் சிறுவர் இல்லத்தை நான் பார்க்கப் போன போதுதான், என் பேனை முனையின் வலிமையை என்னால் உணர முடிந்தது. சிறுவர்களின் முகத்தில் புதுப் பிரகாசம், புது நம்பிக்கை எல்லாமாகச் சேர்ந்து ஒளி விடுகிறது.

எல்லோரும், உண்மையைத் தேடி, நீதியைத் தேடி, நன்மையைத் தேடி, ஒளியைத் தேடிப்போக,

நானோ, பொய்மையைத் தேடி அநீதியைத்தேடி, தீமையைத்தேடி, இருளைத்தேடி ......அவற்றை வெல்ல, அழிக்க, நசுக்க, அந்த விரைகிறேன். (முற்றும்)


## 60 ஆம் நாள் நினைவஞ்சலி



| ஜனனம் | வீரமரணம் |
| --- | --- |
| 12 | 27 |
| 11 | 12 |
| 1968 | 1990 |

**வீரவேங்கை மாறன்**
**(சவரிமுத்து அமலதாஸ்)**

மறவர் படைகாக்க
மானமுடன் போர் கொடுத்து
விரமரணமதை தழுவிய
மாவீரனே மாறா!
தாங்கிய தமிழினத்தைத்

## இயந்திர இயக்குநர்

சிறு அளவிலான அச்சு இயந்திரம் (Hand Feeding Baby Cylinder) இயக்குவதில் தேர்ச்சியும் அனுபவமும் உள்ள இயக்குநர் (Machine Minder) தேவை.

திறமைக்கு ஏற்ப சம்பளமும், தேவைப்படின் தங்குமிட வசதியும் வழங்கப்படும். கிழமை நாட்களில்

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 11 | 27 |
| 01 | 01 |
| 1907 | 1991 |

துணுக்காய்

### திரு. கந்தையா சோமசுந்தரம்

இளைப்பாறிய கிராமசேவையாளர்
(பழைய விதானையார்)

துணுக்காயைச் சேர்ந்த இளைப்பாறிய கிராம சேவையாளர் திரு. கந்தையா சோமசுந்தரம் (பழைய விதானையார்) 27 01 1991 இல் அமரத்துவம் எய்திவிட்டார் என்பதையும், அன்னாரின் மரண அறிவித்தலை சூழ்நிலை காரணமாகச் சகலருக்கும் அறியத்தர முடியாமல் போய்விட்டது என்பதையும் மிகவும் மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

29. 01. 1991 இல் நடைபெற்ற அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் 26 02 1991 செவ்வாய்க்கிழமை துணுக்காயில் நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

துணுக்காய், (R-1125)

## நினைவு கூருகின்றோம்

### பெப்ரவரி 25

1985ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த

❋ துரை (ஐயனாரகம் - கட்டைபறிச்சான்)

❋ சிவனேசன் (...)

# 60 ஆம் நாள் நினைவஞ்சலி



| ஜனனம் | | வீரமரணம் |
|---|---|---|
| 12 - 11 - 1968 | | 27 - 12 - 1990 |

## வீரவேங்கை மாறன்
**(சவரிமுத்து அமலதாஸ்)**

மறவர் படைகாக்க
மானமுடன் போர் கொடுத்து
வீரமரணமதை தழுவிய
மாவீரனே மாறா!
தூங்கிய தமிழினத்தைத்
துடித்தெழ வைத்தாய்
துணிவுடனே போர்க்
களம் பல கண்டாய்.
காலம் உனக்கொரு
காவியம் படைக்கும்
மாறனே
உன் கனவு நனவாகும்
நாளும் பிறக்கும்
விடியலைத் தேடி
வீரமுடன் களம் குதித்த - வேங்கையே
விடிவு வர முன்னர் - உந்தன்
முடிவு வர நேர்ந்ததே.
இருந்தாலும் உன் விடுதலைப் பாதையில்
வேங்கைகளின் பயணங்கள் தொடர்கின்றன.
புலரும் பொழுதினிலே - ஓர் நாள்
மலரும் நற்தமிழீழம் சிறப்பாய்
தவழும் மாறன் உன் நினைவன்று
தமிழரின் வீர நெஞ்சங்களில் நின்று
என்றோ ஓர் நாள்
எதிரிக்கு இடிவிழும்
அன்றே எமது
சுதந்திர தாகம் சுடர்விடும்
மாறனே அன்று உன்
இலட்சியக் கனவுகள் நனவாகும்.

வட்டக்கச்சி — உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

(B-2064)

---

...னால் ஏற்பட்ட இழப்புகளை கணக்குப் பண்ணி, உலகெங்கும் அறிவித்து, தாம் செய்வது சரி என்று நிரூபிக்க நிமிடத்திற்கு ஒரு அறிக்கை விட, அந்த அறிக்கைகளை பக்கம், பக்கமாகப் போட்டு பத்திரிகைப் பக்கங்களை நிரப்ப, இங்கே சொந்த மண்ணில் உயிருள்ளவைத்து, அந்த அனாதைச் சிறுவர்களுக்கு இழைக்கப்படும் அநீதி, வெளியே தெரியாமல் மூடி மறைக்கப்பட்டுக் கிடக்கிறது.

நான் கொண்டு சென்ற பத்திரிகைச் செய்தியை, பத்திரிகை ஆசிரியர் படித்துப் பார்க்கிறார்; வியக்கிறார் நம் மண்ணில் இப்படியும் முளையிலே...

அன்பின் அந்த அனாதைச் சிறுவர் இல்லத்தை நான் பார்க்கப் போன போதுதான், என் பேனை முனையின் வலிமையை என்னால் உணர முடிந்தது. சிறுவர்களின் முகத்தில் புதுப் பிரகாசம், புது நம்பிக்கை எல்லாமாகச் சேர்ந்து ஒளி விடுகிறது.

எல்லோரும், உண்மையைத் தேடி, நீதியைத் தேடி, நன்மையைத் தேடி, ஒளியைத் தேடிப்போக,

நானோ, பொய்மையைத் தேடி அநீதியைத்தேடி, தீமையைத்தேடி, இருளைத்தேடி ......அவற்றை வெல்ல, அழிக்க, நசுக்க, அந்த விரைகிறேன் (முற்றும்)

---

## இயந்திர இயக்குநர்

சிறு அளவிலான அச்சு இயந்திரம் (Hand Feeding Baby Cylinder) இயக்குவதில் தேர்ச்சியும் அனுபவமும் உள்ள இயக்குநர் (Machine Minder) தேவை.

திறமைக்கு ஏற்ப சம்பளமும், தேவைப்படின் தங்குமிட வசதியும் வழங்கப்படும். கிழமை நாட்களில் சான்றிதழ்கள் நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வந்து சந்திக்கவும்,

**அருண் பிறிண்டேர்ஸ்**

15, இரண்டாவது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(R-1131)

---

## மரண அறிவித்தல்

### தம்பிப்பிள்ளை சின்னத்துரை
**(ஓய்வுபெற்ற சமூக சேவை உத்தியோகத்தர்)**

குரும்பசிட்டி தம்பிப்பிள்ளை சின்னத்துரை 24-2-91இல் காலமானார். இவர் ஓய்வுபெற்ற ஆசிரியை மங்கயேஸ்வரியின் அன்புக் கணவரும் தயாபரன் (எந்திரவியலாளர் யாழ். பல்கலைக்கழகம்), வைத்திய கலாநிதி பிரபாகரன் ஆகியோரின் அன்புத்தந்தையும், வைத்தியகலாநிதிகள் சசிதேவி, தேவராணி ஆகியோரின் அன்பு மாமனாரும் தீனதயாளன், திவாகர் ஆகியோரின் பாட்டனாரும், காலஞ்சென்ற செல்லம்மா சபாரத்தினம், காலஞ்சென்ற அதிபர் க. இராசரத்தினம், திருமதி ஏ. சி. பொன்னுத்துரை ஆகியோரின் சகோதரருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அன்றைய தினம் நடைபெற்றது. உற்றார் உறவினர் நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

14, உடையார் லேன்,
கந்தர்மடம்.

குடும்பத்தினர்.

(R-1130)

---

...வளையதுடன் 26 02 1991 செவ்வாய்க்கிழமை துணுக்காயில் நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

துணுக்காய்,

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(R-1125)

---



## நினைவு கூருகின்றோம்

### பெப்ரவரி 25

1985ஆம் ஆண்டு சிறீலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த

❋ **துரை** (ஐ. துரைராசகம் - கட்டைபறிச்சான்)

❋ **சிவனேசன்** (கட்டைபறிச்சான்)

❋ **மூர்த்தி** (க. ஏரம்பமூர்த்தி - உப்புவெளி)

❋ **ஐயா** (நாகபுலராசா - சேனையூர்)

1986ஆம் ஆண்டு அரவம் தீண்டியதால் மரணித்த

**துமிலன்** (சி. விஜயகுமார் - கரடியனாறு, மட்டக்களப்பு)

1987ஆம் ஆண்டு வீரமரணமடைந்த

**கந்தையா** (இ. வரதராசா - நெடுங்கேணி)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

உயிரினும் மேலாகத் தாய் நாட்டை நேசித்தவர் உறவுகளின் இழப்பிலும் உதயத்தைத் தேடியவர் பூவாக மலரும் நாளில் புயலெனவே வீசியவர் பூஜிக்கும் தெய்வங்களாய்ப் புவிமீது வாழ்கின்றார்.

❋ மேற்குறிப்பிடப்பட்டிருக்கும் மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாகும்.

— **விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(B-2060)

### * சிந்தனைக்கு *

குணத்தைக் கலக்கி பருந்திற்கு திண்ணக் கொடுத்தது போல.

— தமிழ் வழக்கு மொழி

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 25-02-1991
தொலைபேசி
அலுவலகம்: 023 - 2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண். 03

## அரபுக்கள் தோற்கும் வளைகுடாப் போர்

வளைகுடாவில் உலக மக்கள் அனைவரும் எதிர்பார்த்த, அதேவேளை அச்சமடைந்திருந்த தரைப்போர் ஆரம்பித்து விட்டது. இப்போரை நிறுத்த சோவியத் யூனியன் எடுத்த சமாதான முயற்சியை ஐ.நா தலைமைச் செயலாளர் டி கொயினர் வரவேற்ற வேளையிலும் அமெரிக்கா நிராகரித்துவிட்டது.

இந்த தரைப்போர் போரழிவை ஏற்படுத்தும் என்பது உண்மை இதில் ஈராக்கிற்கு எவ்வளவு, அமெரிக்க தரப்பினருக்கு எவ்வளவு என்பதைப் பின்னர் கணக்கிட்டுக் கொள்ளலாம். ஆனால். குவைத்திலிருந்து ஈராக் வெளியேறுவதோடு மட்டுமல்லாமல் ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் பதவியில் இருந்து கவிழ்க்கப்படும் வரையும் போர் தொடரும் என எதிர்பார்க்கலாம். ஏனெனில் குவைத்தை அழிவிலிருந்து மீட்பதை விட ஈராக்கை அழிப்பதே அமெரிக்காவின் நோக்கம் என்பது சோவியத் சமாதானத்திட்டத்தை நிராகரித்ததில் இருந்தே வெளிப்படையாக அமெரிக்கா ஏற்றுக்கொண்ட விடயமாகின்றது.

# இருளைத் தேடி...

நான் பிரபல பத்திரிகை நிறுவனம் ஒன்றில் செய்தி நிருபராகக் கடமையாற்றத் தொடங்கி மூன்று மாதங்களுக்கு மேலாகிவிட்டது. வருமானம் ஏதோ அமோகமாகக் கிடைத்தது. என்னைப் பொறுத்தவரையில், நான் பணத்துக்காகப் பத்திரிகைத்துறையில் ஈடுபடவில்லை என்பது உண்மையே. ஒரு ஆர்வம் தான் என்னைப் பத்திரிகைத் துறையில் ஈடுபடத் தூண்டியது. இன்றைய காலகட்டத்தில் ஒரு பத்திரிகையாளனுக்கு இருக்க வேண்டிய அவதானமும், பொறுப்புணர்வும் என்னிடம் நிறையவே உண்டு என்று கூறலாம்.

நான் பத்திரிகைச் செய்தி நிருபராக கடமையாற்றத் தொடங்கி மூன்று மாதம் தான் என்றாலும், நான் பெற்ற அனுபவங்களோ ஏராளம். இந்த அனுபவங்கள் தான் பரந்துபட்ட பத்திரிகை உலகின் வாசலில் நிற்கும் என்னை உள்ளே அழைத்துச் செல்லப்போகிறது என்றுவன் நிலையில் பத்திரிகையாளன் ஒருவன் தன் உள்ளத்தால் மட்டுமன்றி உடலாலும் உழைக்க வேண்டும். செய்திகளைத் தேடி பல மைல் ஓட வேண்டும். ஓடி எடுத்த செய்திகளை பத்திரிகைக் காரியாலயத்துக்கு கொண்டு போய்க் கொடுக்க வேண்டும் கொடுக்கும் செய்திகள் எல்லாம் அடுத்த நாள் பத்திரிகையில், முதற் பக்கத்தில் கொட்டை எழுத்தில். சரி அது தான் வேண்டாம். குறைந்தது கடைசிப்பக்கத்திலாவது.

...க்ச் செய்து என் பேனையின் கூர்மையை உணர வேண்டும். இது தான் என் முதல் ஆசை. எங்கோ ஒரு மூலையில், யாருக்குமே தெரியாமல் நடந்து கொண்டிருக்கும் அநீதியைத் தேடி நாயாய்ப் பேயாய் அலைந்தேன், என் பேனையின் கூர்மையை பரிசோதிக்க தகுந்த இடம் தேடித் திரிந்தேன். எங்கே ஏதாவது அகப்பட்டால் தானே எனக்குப் பெரிய ஆச்சரியமாய் இருந்தது. நம் ஊரில் எங்கும் எல்லாவற்றிலும் நீதி தன் தலைவிரித்து நிற்கிறது (உண்மையில் சின்னச் சின்ன பிழைகள் எல்லாம் இப்போ நீதியாக ஏற்கப்பட்டு விட்டது என்பது முழு உண்மை)

### ந. குகதாசன்

உண்மையைத் தேடலாம்; நீதியைத் தேடலாம்; நன்மையைத் தேடலாம்- எல்லோரும் இதைத் தான் தேடுவதாகக் கூறுகிறார்கள்.

ஆனால் நானோ பொய்யைத் தேடினேன்; அநீதியைத் தேடினேன்; தீமையைத் தேடினேன்

எல்லோரும் இருளில் இருந்து ஒளியைத் தேட அல்லது தேடுவதாகப் பாசாங்கு செய்ய, நான் ஒளியிலிருந்து இருளைத் தேடினேன். என்...

திரும்பி இருக்க அதைச் சாதகமாக வைத்து அநியாயம் தொடர்ந்தது அநியாயம் செய்யலாம் அதையும் நியாயத்துடன் தான் செய்ய வேண்டும்.

அவர்கள் அக்கிரமம் செய்ய காலமும் வழிவகுத்துக் கொடுத்தது. தினமும் மரணங்களும், அழிவுகளும், அலைக்கழிவுகளும் தொடர, எல்லோர் கவலையும் அங்கே இருக்க, அப்பாவி அனாதைகளுக்கு அநியாயம் செய்தார்கள் பத்து வயதுக்கும் குறைந்த அந்த அனாதைகள் தம் மீது இழைக்கப்படும் அநீதியை யாரிடம் சென்று சொல்லி முறையிடுவார்கள்.

எல்லோரும் ஒரே திசையில் கண்வெட்டாது, 'குத்துத் திரும்பிப் பார்க்க, நான் வேறு திசையில் என் பார்வையைத் திருப்பினேன். ஒரு பத்திரிகையாளனுக்கு அவசியமானது அது தான் அதாவது பார்வைவித்தியாசம் அந்தப் பார்வை வித்தியாசம் இல்லாதவன் பத்திரிகையாளனாக இருப்பதில் பலனே இல்லை; ஒருவன் வீதியால் சென்று கொண்டிருந்த பெண் ஒருத்தி அணிந்திருந்த நகையை பறித்துக் கொண்டு ஓடினான். சிலர், அவனை மடக்கிப் பிடித்து அவன் மடங்கும் வரை அடித்து நொறுக்கினார்கள். அந்தக் காட்சியை இருவர் பார்க்கின்றனர். முதலாமவன் சொல்கிறான்; "இவனுக்கு நல்லாவேணும். கால் கையை முறிச்சு விட்டால் தான் இனியும் கள்ளப்புத்திவராது ஒருத்தனுக்கு இப்படிச் செய்து விட்டா, இனி ஒருத்தனும் இப்படிச் செய்ய கனவிலையும் நினைக்க...

… இதில் ஈராக்கிற்கு எவ்வளவு, அமெரிக்க நேசநாடுகளுக்கு எவ்வளவு என்பதைப் பின்னர் கணக்கிட்டுக் கொள்ளலாம். ஆனால், குவைத்திலிருந்து ஈராக் வெளியேறுவதோடு மட்டுமல்லாமல ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் பதவியில் இருந்து கவிழ்க்கப்படும் வரையும் போர் தொடரும் என எதிர்பார்க்கலாம். ஏனெனில் குவைத்தை அழிவிலிருந்து மீட்பதை விட ஈராக்கை அழிப்பதே அமெரிக்காவின் நோக்கம் என்பது சோவியத் சமாதானத்திட்டத்தை நிராகரித்ததில் இருந்தே வெளிப்படையாக அமெரிக்கா ஏற்றுக்கொண்ட விடயமாகின்றது.

அதேவேளை, இத்தரைப்போரில் பேரழிவுகளை ஏற்படுத்தக்கூடிய ஆயுதங்கள் பயன்படுத்தப்படும் என்பதிலும் சந்தேகமிருக்க முடியாது. சவூதிஅரேபியாவின் தனது விமானங்களில் நேபாம் குண்டுகள் ஏற்றப்படுவதை அமெரிக்கா மறைப்பதற்கே முற்படவில்லை என்பதில் இருந்து இதைப் புரிந்து கொள்ளலாம். அதாவது சர்வ வழி யுத்த முறைக்கு அப்பாற்பட்ட தரைப் போராக இது இருக்கும் என்பது மட்டும் உண்மை, இதை அமெரிக்காவும் ஏற்றுக் கொண்டுள்ளது.

இப்போரின் முடிவில் பெரும்பாலும் ஈராக் தலைமை தோற்கடிக்கப்படும் என எதிர்பார்க்கலாம் ஆனால் இதைவிட முக்கியமான விடயம் இந்தப்போரின் முடிவில் அரபு உலகமே அமெரிக்காவினாலும் அதன் கூட்டாளிகளினாலும் தோற்கடிக்கப்படுவதாகும். அதாவது உள்வீட்டுப் பிரச்சினைக்கு தெருச் சண்டியனை வீட்டிற்குள் கூட்டி வந்ததன் பலனை அரபுக்கள் விரைவில் அனுபவிக்கப் போகின்றார்கள்,

இப்போர் அரபுகளுக்கிடையில் என்றும் இல்லாத அளவிற்கு பகைமையுணர்வை வளர்த்துள்ளது: அரபுக்களின் குரல் இனி ஒரு போதும் ஒரே குரலாக உலகில் ஒலிக்கப் போவதில்லை என்பது மட்டும் உண்மை:

இந்தப்போரின் முடிவில் மத்திய கிழக்கின் இராணுவச் சமநிலையே பெரியளவில் மாற்றமடைந்து விடும். அரபுக்களின் பலமான இராணுவம் ஒன்று இப்போரில் அழிக்கப்பட்டுவிடும் அதனை வேறு எந்த அரபு நாடுகளினாலும் அண்மையில் உடனடியாக நிவர்த்தி செய்ய முடியாது: ஏனெனில் கடந்தகால வரலாற்றில் தோல்வி கண்ட அரபுக்கள் தோல்வியில் இருந்து மீண்டதாக இல்லை. அதேவேளை அரபுக்களின் பொருளாதாரமே சிதைந்து விடக்கூடிய நிலையும் உருவாகி விட்டது உலகில் முன்னணி பெற்றோலிய நாடான சவூதி அரேபியாவே இன்று சர்வதேச வங்கிகளிடம் கடன் கோரியுள்ளது. பணக்கார குவைத்தும் போரினால் அழிந்து விட்டது. வளைகுடாப்போரின் விளைவுகளினால் ஒபெக் நிறுவனமும் இனிப்பலமானதொரு நிலையில் இருக்கும் எனவும் சொல்வதற்கில்லை;

இந்நிலையில் இந்தப் போரின் முழு நன்மையையும் அனுபவிக்கப் போவது இஸ்ரேலாகத்தான் இருக்கும்: போரில ஈடுபடாமல் நன்மையடையும் நாடாக இஸ்ரேல் உள்ளது. வளைகுடாவில் அமெரிக்காவின் நலனைப் பேணுவதற்காக, தான் ஈராக்கால் தாக்கப்பட்டபோதும் இஸ்ரேல் நிதானத்தைக் கடைப்பிடித்து நல்ல பெயரை வாங்கிக் கொண்டதோடு, மேற்கின் உதவிகளையும் பெருமளவில் பெற்றுக் கொண்டது. மேலும் தனது இராணுவத்தையும் சிதையாது வைத்துள்ளது. அத்தோடு நவீன இராணுவத் தளபாடங்களையும் பெற்றுள்ளது.

இந்தநிலையில், இப்போரின் முடிவு ஈராக்கிற்கு மட்டுமான தோல்வியாக இராது, அரபு உலகிற்கே ஏற்பட்ட தோல்வியாகவே இருக்கும். இத்தோல்விக்கு சதாம் ஹுசைனை விட்ட தவறு மட்டும் காரணமாக அமையாமல் முழு அரபுக்களும் விட்ட தவறுகளுமே காரணமாகும் ஆகையினால் இத்தோல்விக்குரிய பலாபலன்களை அரபு உலகு அனுபவித்துத்தான் ஆகவேண்டும்.

… தேடி பல மைல் ஓடோட்டமும். ஓடி எடுத்த செய்திகளை பத்திரிகைக் காரியாலயத்துக்கு கொண்டு போய்க் கொடுக்க வேண்டும. கொடுக்கும் செய்திகள் எல்லாம் அடுத்த நாள் பத்திரிகையின், முதற் பக்கத்தில் கொட்டை எழுத்தில், சரி அது தான் வேண்டாம். குறைந்தது கடைசிப்பக்கத்திலாவது. அதுவும் இல்லாமல் அடுத்த அடுத்த நாட்களிலாவது கட்டாயமாக வந்தே தீரும் என்று நம்புவது மகா மகா தப்பு. நான் முதல் எடுத்த செய்தி இடம் பெயர்ந்து வந்த அகதிகளைப் பற்றியதாக அமைந்தது. முதல் நாள் செய்தியைக் கொண்டு போய்க் கொடுத்து விட்டு அடுத்த நாள் காலை நான் கொண்டு போய்க் கொடுத்த செய்தியைப் பத்திரிகையில் தேடுகிறேன் அது வந்திருந்தால் தானே - சரி நாளை வருமாக்கும் என்று மனதைத் தேற்றிக் கொண்டேன். அடுத்த நாளாவது நான் கொடுத்த செய்தி வந்ததா என்றால் இல்லை. இந்தச் செய்தியை பத்திரிகைக் காரியாலயத்தில் கொண்டு போய்க் கொடுப்பதற்காக இருபது மைல்களுக்கு மேல் சைக்கிள் பயணம் வேறு-மனதில் பெரும் ஏமாற்றம் இருந்தாலும் தன்னம்பிக்கை, விடாமுயற்சி, பொறுமை, கடின உழைப்பு இப்படி இன்னும் எத்தனையோ அடிப்படையில் என் பணியைத் தொடர்ந்தேன். ஒருவாறாக நான் மூன்றாம் முறையாக கொண்டு போய்க் கொடுத்த செய்தி பத்திரிகையின் கடைசிப் பக்கத்தில் கடைசி மூலையில் வந்திருந்தது. அதைப் பார்த்ததும் நான் அடைந்த மகிழ்ச்சி இருக்கிறதே அது.... எவரெஸ்ட் சிகரத்தையடைந்து திரும்பிய "டென்சிங்" பெற்ற மகிழ்ச்சியை விடக் கூடுதல் தான்,

நான் நிருபராகப் பணியேற்ற காலம் செய்திகளுக்குப் பஞ்சமேயில்லை. தாக்குதலும், மரணங்களும் அதோடு சேர்ந்து விலைவாசி உயர்வும் கலப்படமும் இப்படியே செய்திப்பட்டியல் நீண்டுநிற்கும். எத்தனை நாட்கள் தான் இதையே திருப்பித் திருப்பி எழுதுவது. நான் சாதிக்க நினைத்தது இவ்வளவு தானா? என் கனவுகளும், கற்பனைகளும், எதிர்பார்ப்புகளும் இதோடு முடிவதா?

எங்கோ ஒரு மூலையில் யாருக்குமே தெரியாமல் ஒரு அநீதி நடக்கிறது. என் பேனை முனையால் அந்த அநீதியை வெட்ட வெளிச்சத்துக்கு கொண்டு வந்து நீதி கிடைக்

எல்லோரும் இருளில் இருந்து ஒளியைத் தேட அல்லது தேடுவதைப் பாசாங்கு செய்ய, நான் ஒளியிலிருந்து இருளைத் தேடினேன். ஏன் தேடினேன் என்பதுதான் முக்கியம் நான் தேடிக்காணும் இருளைக் கிழித்து ஒளியைப் பரப்பி ...

நான் ஒன்றை நம்பினேன்; நம்புகிறேன் எங்கோ ஒரு மூலையில் வெளியே பார்வைக்குத் தெரியாமல் அநியாயங்கள் நடந்து கொண்டே இருக்கிறது; இருக்கும் - அப்படி இல்லாவிட்டால், இங்கேயும் மாரி பெய்யுமே. ஆமாம் பெய்கிறது; கோடையில் மழை; மாரியில் வெயில்; இப்போதாவது நம்புங்கள் அநீதி எங்கோ ஒரு மூலையில் - தொடர்ந்து நடக்கின்றது.

என் தேடல் வெற்றியளித்தது பொய்யை, அநீதியை, தீமையை இருளை தேடிக் கண்டு கொண்டேன்.

… யோசிக்கிறான்; "இவனுக்கு நல்லாவே வேணும். கால் கையை முறிச்சு விட்டால் தான் இனியும் கன்னப்புத்தி வராது ஒருத்தனுக்கு இப்படிச் செய்து விட்டா, இனி ஒருத்தனும் இப்பிடிச் செய்ய கனவிலையும் நினைக்க மாட்டாங்கள்" இரண்டாமவன் வாய் திறந்து எதுவுமே கதைக்கவில்லை, யோசனை செய்கிறான். "இவன் ஏன் நகையைக் களவாட முயற்சி செய்தான். தான் செய்தது பிழை என்பதை அவன் உணர்ந்து கொள்ளவில்லையோ? அப்படி இருக்காது; தன் தேவைக்காகத்தான் அவன் திருட முயற்சித்திருக்கிறான் அவன் தேவை நகை அணிவதோ அல்லது, ஆடம்பரத் தேவையைப் பூர்த்தி செய்வதாகவோ இருக்க முடியாது? ஏதோ முக்கியமான காரணந்தான் அவனைத் திருடத்தூண்டி இருக்கும். அவன் எத்தனை நாள் பட்டினியோ? அவனை நம்பி எத்தனை பேர் வீட்டில் பட்டினியாகப் பழிகிடக்கிறார்

ஈழநாதம் முதலாவது ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் இரண்டாவது பரிசு பெற்ற சிறுகதை.

விடுதலைப் போராட்டத்தில் எல்லோர் பார்வையும் திரும்பி நிற்க, அங்கே ஒரு மூலையில், எவருக்குமே தெரியாமல் ஒரு அநியாயம் என் கண்ணில் தென்படும் வரை தொடர்ந்து கொண்டிருந்தது.

அது ஒரு அனாதைச் சிறுவர் இல்லம். அரசாங்க உதவியுடன் நடாத்தப்படும் சிறுவர் இல்லம். அங்கே சுமார் பத்துக் குழந்தைகளுக்கு மேல் பராமரிக்கப்பட்டு வந்தார்கள். அவர்களைக் கவனிக்க ஒன்பது பேர் "சம்பளத்துக்கு" நன்றாகக் கவனியுங்கள் சம்பளத்துக்குப் பணியாற்றினார்கள். அரசாங்க உதவிகள் அந்தச் சிறுவர் இல்லத்துக்கு தாராளமாகக் கிடைத்தது. ஆனால் அந்த உதவிகள் யாரைச் சென்றடைய வேண்டுமோ, அவர்களைச் சென்றடையவில்லை. கிடைத்த உதவிப் பொருட்கள் சந்தைக்கும், வீட்டுக்கும் போய்ச் சேர, அனாதைப் பிள்ளைகள் அரை வயிறும் கால் வயிறுமாக, அழுக்கு ஆடைகளுடன் சோபை இழந்த முகத்துடன் வாழ வேண்டிய நிலை. எல்லோர் பார்வையும் வேறு திசையில்

களோ? இந்தச் சமூகம் அவனைத் தொடர்ந்து வஞ்சித்து வந்திருக்கலாம் அதனால் அவன் தன் வஞ்சத்தைத் தீர்க்கத் திருட முனைந்திருக்கலாம். அவனைப் பிடித்து அடித்து, உதைத்து கால் கையை முறித்து விட்டால் போதுமா? அவன் திருந்திவிடுவானா? இன்று தனியே நகையை மட்டும் பறித்தவன் நாளை கொலை செய்து நகையை எடுத்துச் செல்வான்: அப்போது அவன் கையில் கத்தி இருக்கும், அந்த நேரம் இப்போது அடித்து நொருக்குபவர்களில் எத்தனை பேர் அருகில் செல்வார்கள். ஒருவனும் போக மாட்டான் ஏன்? பயம்- இவர்கள் அடிப்பது கெட்டவனை மேலும் கெட்டவனாக்கும் செயலே தவிர வேறு ஒன்றுமில்லை. அவன் பசியால் வாடியதை இருக்க, அவன் முன்பாய் படாடோபமாய் நின்று ஆடம்பரம் செய்தால், அவனுக்கு எப்படி இருக்கும் அவனைப் போட்டு அடிப்பவர்கள் இப்படி ஏன் யோசிக்கவில்லை"

இப்படி வித்தியாசமான பார்வையில், யதார்த்தத்தை

(2 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் முதலீடு செய்ய வெளிநாட்டவர்கள் தயக்கம்

-நிசங்க விஜயரெட்னா

(கொழும்பு)

"வடக்கு-கிழக்கு பிரச்சினை தொடர்பாக மேற்குத்தேச பொது சன தொடர்பு சாதனங்கள் மூலம் இலங்கைக்கு எதிரான பிரசாரங்கள் நடைபெறுவதால் இலங்கையில் முதலீடு செய்வதற்கு வெளிநாட்டவர்கள் தயக்கம் காட்டுகின்றனர்" என பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவின் செயலாளர் நிசங்க விஜயரத்தின தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை செய்தியாளர்கள் மாநாட்டில் பேசிய நிசங்க விஜயரெட்னா மனித உரிமைகள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக நடத்தப்படும் அதிக பிரசாரங்களும், வெளிநாட்டவர் இங்கு வந்து முதலீடு செய்ய தயக்கம் காட்டுவதற்கு ஒரு காரணம் எனவும் தெரிவித்தார்.

## அந்தரங்கச் செயலாளர்களும் 'பென்ஸில்' ஓடுகின்றார்கள்

"அமைச்சர்கள் மட்டுமல்ல அந்தரங்கச் செயலாளர்களாக நியமிக்கப்படும் அமைச்சர்களின் மனைவிமார்களும் பென்ஸ் காரில் ஓடுகின்றனர்" என ஐக்கிய சோசலிஷ முன்னணி உறுப்பினர் வத்தவட செவிரத்ன கூறியுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் கம்பனிகள் சட்டத்தின் கீழான இரகசிய தீர்வைகள் சம்பந்தமான விவாதத்தின்போது அமைச்சரவை அரசாங்கத்திற்கு ஏற்படும் செலவுகள் குறித்து பேசும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## சிறுபான்மை அரசிற்குப் பலவீனங்கள் இருக்கும்

-சந்திரசேகர்

எமது அரசாங்கம் சிறுபான்மை என்பதால் அதற்கே உரிய சில பலவீனங்கள் இருக்கத்தான் செய்யும் என இந்தியப் பிரதமர் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மத்தியப் பிரதேசத்தில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் சிறுபான்மை அரசாங்கம் என்பதால் உடனடியாக மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட முடியாமல் இருக்கின்றன எனத் தெரிவித்தார்.

இடைக்காலத் தேர்தல் பற்றி குறிப்பிடும்போது தேர்தல் குறித்த முன் முயற்சிகளை தான் மேற்கொள்ளப் போவதில்லை என்றும் எல்லோரும் விரும்பினால் தேர்தலை நடத்தலாம் என்றும் ஆனால் தேர்தலுக்கான காலம் இன்னமும் கனியவில்லை என்றும் தெரிவித்தார்.

## பாம்பு தீண்டி மரணம்

### வளைகுடாவில்

பிரான்ஸ் ஜனாதிபதி மித்ரோன் தமது படைகளுக்கு தரைத் தாக்குதலை மேற்கொள்ளும்படி உத்தரவிட்டுள்ளார்.

இரண்டாவது உலக யுத்தத்துக்குப்பிறகு நடைபெறும் பாரிய அளவிலான தரையுத்தம் இது என்று போர் விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவினதும், அதன் சார்பு நாடுகளினதும் இராணுவ அணிகளில் மொத்தம் 7 இலட்சம் வீரர்கள் பங்கேற்கிறார்கள். இவர்களில் அமெரிக்கர்கள் 5 இலட்சத்து 30 ஆயிரம்பேராகும். எதிரணியின் திரண்ட ஈராக்கிய இராணுவத்தின் எண்ணிக்கை 5 இலட்சத்து 45 ஆயிரம்.

அதேவேளை ஈராக்கினுள் 50 கிலோ மீற்றர் வரை கூட்டணிப்படைகள் முன்னேறிவிட்டதாக உறுதிப்படுத்தப்ப...

### முன்னேற

நீண்ட நேரம் நீடித்த இச்சண்டையின்பின் இராணுவத்தினர் பலத்த இழப்புகளுடன் பின்வாங்கிச் சென்றுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இம்மோதலில் கொல்லப்பட்ட, காயப்பட்ட இராணுவத்தினரின் எண்ணிக்கை விபரம் தெரியவரவில்லை.

### சிலாவத்துறை

தலைப்புலிகள் எதிர்த் தாக்குதல் மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதலால் இராணுவத் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டது. சேதாரங்களின் விபரம் தெரியவில்லை.

(மு)

### பாதுகாப்பிற்காக

# கஞ்சிகுடிச்சாறுப் பகுதியில் இராணுவத்தால் தோணிகள் நாசம்

(பொத்துவில்)

கஞ்சிகுடிச்சாறு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின்போது ஹெலிகொப்டரினால் பொத்துவிலின் மேற்குக்கரையில் மீன்பிடிப்பதற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நான்கு தோணிகள் நாசமடைந்தன.

திருக்கோயில், ஆலையடிவேம்பு காட்டுப்பகுதிகள் மீது ஆகாயமார்க்கமான தாக்குதல்களும், தரைத் தாக்குதல்களும் அதிகரிக்கப்பட்டுள்ளதால் கால்நடை வளர்ப்போரும், நானாந்த விவசாயத் தொழிலாளர்களும் தொழில் செய்ய முடியாது கஷ்டப்படுகின்றனர்.

# 39 ஆம் நாள் வளைகுடாப்போர்

★ அமெரிக்க நிபந்தனைகளுக்கும் சோவியத் பேச்சுவார்த்தைக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை தீர்ப்பதற்காக இரகசிய கூட்டம் ஒன்றை நடாத்திய ஐ.நா. பாதுகாப்புச்சபை அந்த முயற்சியில் தோல்விகண்டுள்ளது.

★ இந்தியாவும் மொஸ்கோவும் மேற்கொள்ளும் பேச்சுவார்த்தைகள் காரணமாக ஐ.நா. பாதுகாப்புச் சபையின் கூட்டம் மீண்டும் கூட்டப்படவுள்ளது.

★ ஐ.நா. சபையின் தீர்மானத்தை அமுல் படுத்துவதில் தனக்குள்ள கடமைப் பொறுப்பை நிறைவேற்ற வாஷிங்டன் உறுதி பூண்டிருக்கிறது" என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அறிவித்துள்ளார்.

★ யூகோஸ்லாவியா, இந்தியா, கியூபா, ஈரான் ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் டெஹ்ரானில் கூடியுள்ளனர். வளைகுடா நெருக்கடிக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண சோவியத்யூனியன் சீனா இந்தியா உட்பட ஐ.நா. பாதுகாப்புச்சபையின் உறுப்பு நாடுகள் சில முயற்சிகள் மேற்கொண்டு வருகையில் கூட்டணிப்படைகள் தரைப்போர் தொடங்கியுள்ளது குறித்து இந்தியா கவலை தெரிவித்துள்ளது.

★ வளைகுடாவில் மீண்டும் அமைதியைத் தோற்றுவிக்கும் முயற்சியை மேற்கொள்ளுமாறு இந்தியாவும், ஈரானும் கேட்டுக்கொண்டுள்ளன.

★ ஐ.நா. பாதுகாப்புச் சபையில் சில உறுப்பு நாடுகள் வகித்த நிலையினால் ஐ.நா. கடமைகளை நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது என இந்தியா விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

★ சோவியத் ஜனாதிபதி கொர்பசேவ் வளைகுடாவில் தரைப்போர் தொடங்கியமை தொடர்பாக ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளார்.

★ தரைப்போர் மனவேதனைக்குரியது ஆனால் தவிர்க்க முடியாததென்று ஜப்பான் பிரதமர் கைபூ கூறியுள்ளார்.

★ வளைகுடாவில் தரைப்போர் தொடங்கியபின் இஸ்ரேலினால் கைப்பற்றப்பட்ட காஸாப்பகுதியில் ஊரடங்கு உத்...

